கலைப் பேரரசு ஏ.ரி.பி.

# அரங்கக் கலையில் ஐம்பதாண்டு



கோகிலா மகேந்திரன்

பவள விழா வெளியீடு

நூல் : கலைப்பேரரசு ஏ.ரி.பி.
அரங்கக் கலையில் ஐம்பதாண்டு

ஆசிரியர் : கோகிலா மகேந்திரன்

வெளியீடு : தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்

முதற்பதிப்பு : 15.05.2003


கணனி : செந்தில்

அட்டைப்படம் : வர்ணம்

முன் அட்டை : குரு

பதிப்பகம் : அம்மா அச்சகம், இணுவில்.

விலை : 75-00



ஏ. ரி. பி யின் இளமைத்தோற்றம்

## கலைப்பேரரசு ஏ.ரி.பி.

# அரங்கக் கலையில் ஐம்பதாண்டு

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பதிப்புரை | v |
| 2. | அணிந்துரை | vii |
| 3. | ஏ.ரி.பொ.கலையாற்றைப் பன்னீராக்கும் மலையூற்றுப்பூ | xii |
| 4. | நாடகமே வாழ்க்கையென நின்றீர் வாழி | xiv |
| 5. | கலை | 1 |
| 6. | கலைகளின் அரசன் - நாடகம் | 8 |
| 7. | கல்வி | 14 |
| 8. | கலைஞர் | 18 |

# பதிப்புரை

கலைப்பேரரசு ஏ.ரி.பி எனக் கலையுலகு மதிப்புடன் அழைக்கும் கலை விளையும் கவின்பெருகு பூமியான குரும்பசிட்டி தந்த தூய கலைப் பண்பின் வடிவமாக எம்முன் விளங்குபவர் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள்.

இவர் தனது கலையுலக வாழ்வில் குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ் இலக்கிய வட்டம், மாவை முத்தமிழ் மன்றம், யாழ் நாடக அரங்கக் கல்லூரி, தெல்லிப்பழைக் கலை இலக்கிய களம் என்பவற்றின் கலைப்பணிகளினூடே இணைந்து வரலாறு படைத்தவர்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவர், செயலாளர் முதலான பல பதவிகளில் இருந்து அன்று முதல் இன்று வரை கலை இலக்கிய சமயப் பணிகளில் தளராது உழைப்பவர்.

யாழ். இலக்கிய வட்டத்தில் ஆரம்பகாலம் முதல் பல பதவிகளில் இருந்து இலக்கியப் பணிக்குப் பங்களிப்புச் செய்பவர்.

மாவை முத்தமிழ் மன்றத்தில் இணைந்து வரலாற்றுப் புகழ்மிக்க நாடகங்களைத் தயாரித்தளித்துப் புகழ்கொண்டவர்.

யாழ் நாடக அரங்கக் கல்லூரியில் சேர்ந்து நவீன நாடக அரங்கியல் களப் பயிற்சி பெற்றவர். மூத்த கலைஞனாக இருந்த போதும் இளைஞர்களுடன் இணைந்து நவீன அரங்கியலை பலர் வியக்கும் வண்ணம் பயின்று நிகழ்த்தியவர்.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் மூலவேராக இருந்து அதனை உருவாக்கி இன்றுவரை இணைச் செயலாளராயும் நாடகத்துறைத் தலைவராயும் இருந்து அளப்பரிய கலை இலக்கியப் பணி ஆற்றுபவர்.

கம்பன் கழகப் பட்டிமண்டபங்களிலும் விழாக்களிலும் தன் இலக்கியத் திறனை நிலைநாட்டியவர்.

தான் தனிப்பட்ட முறையில் தனிநடிப்புப் போட்டிகளை நடாத்திப் பரிசு வழங்கித் தனிநடிப்புக் கலையை வளர்த்தவர்.

சைவாசார ஒழுக்கங்களுடன் சமயச் சொற்பொழிவுகளும், சமயப்பணிகளும் செய்பவர்.

ஆக்க இலக்கிய கர்த்தாவாகப் பலதரப்பட்ட நாடக, இலக்கிய நூல்களைத் தந்தவர். ஒப்பற்ற அழகியற் கலைகளின் ஒட்டுமொத்த உருவமாய்க் காட்சி தருபவர்.

ஒப்பற்ற கலைஞனாக மட்டுமன்றி கலாரசிகனாகவும், கலைஞர்களை ஊக்குவிக்கும் உந்துசக்தியாகவும் விளங்குபவர்.

உடல் முதுமையடைந்தபோதும் உள்ளத்தின் இளமைத் தூய்மையுடன் உடலையும் இயங்க வைத்த அதிசயக் காட்சிகளை அண்மைக் காலத்து அவரின் அரங்குகளிற் கண்டு வியக்காதவர் இல்லை.

75 வயது நிறைவாகும் இவ்வேளையில் புறவுலகக் கலைக் காட்சிகளைக் காணமுடியா வண்ணம் அரங்கில் ஆடிய அவரது கால்கள் ஓய்ந்து வீட்டில் இருந்தபடியே அககாட்சியில் லயித்துள்ளார்.

இவ்வேளையில் எமது கலை இலக்கியக் களத்தின் பிதாமகரான ஏ.ரி.பிக்குப் பவளவிழாவெடுத்து அதன் நினைவாக இந்நூலை வெளியிடுவதன் மூலம் அவரது தூய கலைத்தொண்டு நின்று நிலைக்கக் கலைத்தெய்வத்தைத் தொழுகின்றோம்.

தெல்லிப்பழைக்
கலை இலக்கியக் களம்.
2003.05.15

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**
இணைத் தலைவர்



# அணிந்துரை

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியர் திண்ணியராகப் பெறின்"**
(திருக்குறள்)

உலகில் வைராக்கியம் கொண்ட மனத்தினர் இருப்பது வெகுசிலரே. சமய வைராக்கியம் போன்று சமுதாய வைராக்கியமும் பயன்தந்து நிற்கும். சமுதாய வைராக்கியம் கொண்டோர் சமூகத்தின் பலதரப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை சமச்சீருடன் நோக்குவர். இவர்கள் மொழி, கலை கலாசாரப் பண்பாடுகளை முன்னேற்றுவதற்காக அரும்பெரும் தொண்டுகளையாற்றுவர். இவற்றின் மூலவேர்களோடுதான் நாட்டின் முன்னேற்றத்தையும் கவனிப்பர். இத்தகைய குணாதிசயங்களைக் கொண்டோர் பிறர் தூற்றினாலும் வருந்தமாட்டார்கள், போற்றினாலும் மகிழவும் மாட்டார்கள். இவர்களது மனவுறுதியை நயத்தினாலேனும், பயத்தினாலேனும் மாற்றவே முடியாது. தகுந்ததாகவும் நிறைவு கொண்டதாகவும், சமய, சமூக நலன்களுக்கு உகந்ததாகவும் நாட்டின் நலனுக்கு நன்மை தரத்தக்கதாகவும் எவை உணரப் படுகின்றதோ அந்த உணர்வுகட்கு உயிரூட்டி, தாம் சரியென நினைத்ததை பூர்த்தி செய்யும் நேர்மையானவர்கள்தான் சமுதாய வைராக்கியம் கொண்டவர்கள். இதனையே மேற்கூறிய திருக்குறள் உணர்த்தி நிற்கின்றது. பேராசிரியர் ஆர்.பி.சேதுப்பிள்ளை அவர்களது கருத்தும் இதுவேதான். இத்தகைய வைராக்கிய உணர்வோடு ஈழநாட்டின் அணிகலனாக விளங்குகிறார் குரும்பசிட்டி கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை B.A அவர்கள். காவ்ய நாயகனாக திகழ்ந்த மஹாகவி காளிதாஸர் காவ்ய வரிசையில் காதால் கேட்டும், படித்தும் உணர்வதை "சிரவ்ய" காவியமென்றும்; ரசனையின் மூலம் வாழ்வின் புனிதத்தன்மையை மேலெடுக்கும் அசைவுகளினாலும், கேட்டு ரசிப்பதனாலும் எழும் காவியத்தை "த்ருஸ்ய" காவியமென்றும், இதற்குத் துணைநூலாக சகுந்தலம், உத்தமராமசரிதம், மாளிவகாக்நிமித்ரம், விக்ரமோர்வசியம் என்ற நாடக நூல்களையும் காளிதாஸர் இயற்றினார். காளிதாஸரது

நாடகங்களில் மனித ஆற்றலுக்கான தெளிவான ஓர் சம்பவத்தை வெளிப்படுத்தி அச்சம்பவத்தினூடாக ரஸனைகளை வரவழைத்து, அவ் ரசனைகள் சார்பாக மனிதனுக்குத் தேவையான ஞானத்தை ஊட்டவே திருஸ்யகாவ்யம் எழுந்தன. நாடகங்கள் மூலம் "த்வனி" என்றும் "வயங்கியம்"" என்றும் ஓர் ஜீவசக்தி ஊட்டப்பட்டது. சிறந்த நற்கருத்துகளை ஆழமாக்கி, அக்கருத்துக்களின் உயிரசக்தி கொண்ட தன்மைகளை முன்னெடுத்து மனிதனது மனதை மகிழ்விப்பதோடு அந்த மகிழ்ச்சியில் வாழ்வின் தகுதிகளை ஆற்றுப்படுத்தி தர்மார்த்த, காம, மோக்ஷ சாதனைகளோடு மனிதன் வாழ அக்காலத்தைய நாடகங்கள் பலன் தந்துள்ளன. இத்தகைய சிறப்பிற்கு நாடகங்களின் "ரஸத்வனி", "அலங்காரத்துவனி", "வஸத்துவனி" எனும் தொனிகள் மூலம் மனதையும் உள்ளத்தையும் கவரக்கூடியதாக ஆடல்கள், பாடல்கள், நளினங்களோடு, பற்பல ரஸனைகளோடும் அவை அமைந்தன. இத்தகைய அம்ஸங்கள் மூலம் நாடகத்தை உயிரூட்டிய தன்மை எங்குமே காணப்படவில்லை. "ஷேக்ஸ்பியர்" நாடகங்களில்கூட இவை அமையவில்லை. அவ்வளவு சிறப்பு காளிதாஸரது நாடகங்களில் பொதிந்திருந்தன. இவை உ.வே.சுவாமினாதஐயரது கூற்றுமாகும்.

இவற்றினை ஓரளவிற்கு உணர்ந்துதான் பேரரசர் ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் தமது நாடக உத்திகளை மேற்கூறிய ரஸனைகளோடு முன்னெடுத்தவர். நடேஸ்வராக் கல்லூரியில் "லோபி" பாத்திரத்தின் மூலம் மேற்கூறிய அம்சங்கள் முன்னெடுக்கப் பட்டன. தொடர்ந்து குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆட்டக் காவடி, நிறைகுடம், மாவை முத்தமிழ்க் கலை மன்றத்தின் பண்பின் சிகரம், பாசக்குரல், பரதன் நாடகங்களில் மேற்கூறிய யுக்திகள் அடக்கப்பட்டதனால் இந்த நாடகங்களை அவதானித்த கிராமிய மக்கள்கூட அவற்றின் சாராம்சங்களையேற்று வாழ்க்கையோடு இணைத்து அவற்றின் கருத்துக்களை மனதில் பதித்து



வைத்துள்ளமையை நோக்கும்போது அந்நாடகங்களின் உயிர்ச் சத்துப் பேறுகள் யாவும் எத்தகையதென ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களது நாடக உத்திகளையும், கருத்துக்களை தொனிகள் மூலம் வெளிப்படுத்திய தகைமைகளையும் காலங்காலமாகத் தொடர்ந்து வந்த கலாசாரங்களையும், நாடகம் மூலம் வெளிப்படுத்திய போதனைகள் இவற்றினால் எழுந்த உணர்வுகளையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

அருள் உள்ளமும் ஆன்மீகத் தமிழ் நெஞ்சமும் கொண்டு, காண்பவர்களெல்லாம் இறைவன் மைந்தர்களே என்ற வேத வாக்கோடு ஊரெங்கும் பவனி வரும் ஏ.ரி.பொன்னுத்துரையவர்கள், மானிடவம்சம் வாழையடி வாழையாக விளங்குவதும் ஆதிப்பரம் பொருளின் அருள் வல்லமையாற்தான் என்று "எங்கெங்கு காணினும் சக்தியடா ஏழ்கடல் அவள் வண்ணமடா - தங்கும் வெளியினில் கோடி அண்டம் தாயின் கைப்பந்தமென ஓடுமடா" என்ற பாவேந்தர் பாரதிதாஸனின் சித்தாந்த சிந்தனைகளோடு இணைந்து நடமாடுபவர்.

இளம் வயதிலிருந்து இன்றுவரை "நாடகமே" தனது உயிர்த்துடிப்பு என்ற வகையில் நடமாடி, ஈடிணையற்ற ஏராளமான நாடகங்களை நெறிப்படுத்தி அரங்கேற்றி, எங்கும் தனக்கென்றதோர் முத்திரையிணைத்து, அசைக்க முடியாத நாடக உத்திகளை மேற்கொண்டு வெற்றிவாகையோடு வலம்வருவதை ஓர் சிலர் பொறுக்கமுடியாது இவரது நற்செயல்களுக்கு இடையூறு செய்த வரலாறுகளும் உண்டு. கிறிஸ்தவ சங்கமொன்று கூட ஏ.ரி.பொன்னுத்துரையின் பாணியில் மேற்கொண்ட நாடக ஆட்டங்கள் ஓர் சில நாட்களில் பூவினது மணம் அன்றே மறைந்தது போன்று இவர்களது நாடக வாசனைகளும் மறைந்து கொண்டே இருக்கின்றன. அவர்கட்குப் பணப்பலமிருந்தும் ஏ.ரி.பொன்னுத்துரையின் நாடகத்துறையின் திறமைக்கும் உத்திகளுக்கும் ஒழுங்குகளுக்கும் இந்த மிஷனெறிமாரின் ஆட்டங்கள், கூத்துக்கள் ஈடுசெய்யவே இல்லை. ஈடுசெய்யவும் மாட்டாது. இது மயில் ஆடுவதைப் பார்த்து வான்கோழி தனது வாலையுயர்த்திய கதையாகவே அமைகிறது.

ஈழநாட்டின் தனிப்பெருந்தலைவன், அதுவும் நாடகத் துறையின் ஆச்சார்யன் என்று சகலராலும் போற்றப்படுபவர் ஏ.ரி.பொன்னுத்துரையவர்கள். இருபதாம் நூற்றாண்டின் நாடக விற்பன்னன் என்றுகூட ஒருகால் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் ஓர் விழாமேடையில் பாராட்டுப் பெற்றவர்.

பாரதகால ஆயாதிகளிலும் பார்க்க மோசமான மகா ஆயாதிகள் மலிந்த இக்காலகட்டத்தில் தர்மமே அருகிவரும் இந்நாட்களில் அன்னியமதச் சகவாசம், அன்னியமத மிஷனறிமார்கள் போன்றோரது கெடுபிடிகள் இத்தகையோரது நட்பு திரு.ஏ.ரி. பொன்னுத்துரையின் உடல் நலம் குன்றும் வகையில் அமைந்து விட்டது. இந்தப் பண்பாடு இப்போ ஈழநாடெங்கும் சகல துறைகளிலும் விஷகிருமிகள் போல் ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்றது. கலை, கலாசார பண்பாடுகள் யாவும் தலைகீழாக மோதி நிற்கின்றன. தமிழனில் அது சைவத் தமிழனிற்கேயுரியது. சைவமும், தமிழும் இருகண்கள். அன்னிய சகவாசங்கள் சைவக் கண்களைக்கூட நாடகங்களை நசுக்குமாப் போல் நசிக்க முனைகிறது. இதனைத் தடுக்க கலையரசு சொர்ணலிங்கமோ, கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையோ, பேராசிரியர் வித்தியானந்தனோ இப்போது இல்லை. பூமிகூட இவற்றினை நினைத்து தனது பொலிவை இழக்கிறது.

மேற்கத்தைய உலகத்தினர் கீழைத்தேய ஞானசிருஷ்டிகளை தம்வசப்படுத்தி எமக்கே ஞானோபதேசம் செய்வது போன்று, நாடகக் கலைக்குள்ளும் அத்தகைய சேஷ்டைகளை மேற்கொள்ளு கின்றனர். நாடகங்களில் SQUIB - வகைக்கூத்து, SOLILOQVIZE - தனிப்பேச்சு, SATIRE - வஞ்சகப்புகழ்ச்சி, MISTRY PLAY - அதிசய உத்தி, MONOCOGVE - ஏகாதிபத்திய உத்தி, MORALIY PLAY - நீதிநெறி உத்தி, MIRACLE PLAY - சுவாமிமாரது அதிசய அற்புத உத்தி, MASQVE - பாட்டு, நடனம் உடையலங்காரம் மூலம் ஆற்றும் உத்திகள், FARCE - நடனச்சுவை உத்தி இவ்வாறெல்லாம் நாடக பிரசங்கங்கள்கூட பல்கலைக்கழக வளாகங்களில் பாதரொருவர் பிரசங்கிக்கிறார். இந்த உத்தி வகைகளில்



வெகுகச்சிதமாக தனது மதமாற்றஞ் செய்யும் நடவடிக்கைகளுக்கு தனது மதம் சார்ந்த நாடகங்களில் இணைத்து நாடகமாடுகிறார். இந்த உத்திகள் காளிதாஸர் காலத்திலேயே கையாளப்பட்டிருக்கிறது. அதனை வானொலி சண்முகநாதன், சொக்கலிங்கம் (சொக்கன்), கலையரசு சொர்ணலிங்கம், கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஆகியோர் வெகுகச்சிதமாகவும், திறமையாகவும் ஏராளமான நாடகங்களில் இணைத்து வெற்றி கண்டுள்ளனர். எமது கலைவண்ணத்தை, எமக்குரிய கலையம்சத்தை, எமக்கே சொந்தமான கலைச் செல்வத்தை இப்போ மேற்கத்திய நடை, உடை, பாவனை, பாஷையை சிரமேற்கொண்டு பவனிவரும் பரசேத விஸ்வாசிகள் எமக்கு அறிவூட்டி நிற்கும் செயலை நினைந்து ரசிகப் பெருமக்கள் பரிகாசம் செய்கிறார்கள். அதோடு மேற்கூறிய வித்வான்களான நாடகாசிரியர்களையும் நினைவிற்கொண்டு இவர்கட்கு ஈடிணையாருளர் என்ற கேள்விக்கும் விடை தேடுகிறார்கள்.

என் செய்வது. கிராமியப் பரம்பரையினரால் மேலெழுந்து வந்த தெருக்கூத்து, கரகாட்டம், கும்மி, காவடியாட்டம், வசந்தன் ஆட்டம், கோலாட்டம், மேடைக்கூத்து என்பன மறைந்துகொண்டு இருக்கின்றன. இவற்றினை முன்னெடுத்த ஆசிரியர்கள்கூட மறைந்து கொண்டேயிருக்கின்றனர். ஏ.ரி.பொன்னுத்துரையோடு எஞ்சிய பயிற்சியும் மறையும் நிலையில் தானுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேற்கத்தைய கலை கலாசாரங்கள் எமது சிவபூமிக்குள் ஊடுருவியதே முக்கிய காரணமாகிறது. இனிக் காலந்தான் பதில்தர வேண்டும்.

எனது நண்பனும் மாவைக் கந்தனது தொண்டனும், ஈழம்வாழ் சைவர்களது தோழனுமான கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் நீடூழி வாழ்ந்து இனிமையான உணர்வுகளைப் பெற எல்லாம்வல்ல மாவைக் கந்தனது திருவருள் கூட்டவேண்டுமென யான் பிரார்த்திக்கின்றேன்.

"நன்றே செய்து இனிதே வாழ்க"

மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்.

## ஏ.ரி.பொ.
## கலையாற்றைப் பன்னீராக்கும் மலையூற்றுப்பூ

– கவிஞர் வி. கந்தவனம் –

கலையாற்றைப் பன்னீராக்கும்
மலையூற்றுப் பூ!
அரசுகளை வென்று
பேரரசைப் பெற்றிருந்த
பெரும் பூரிப் பூ!

எனக்கு அவர் அண்ணன்
நடிப்பில் ஒரு விண்ணன்!

முன்னர் சென்னையில்
இவரது நடிப்பைப் பார்த்து
உள்ளம் மிகவே பூத்துக்
கைதட்டி ஆர்த்து
நாமிருவரும் நண்பர்களாகிய கதை
நினைக்க நினைக்கச் சுவைக்குந் தேன்வதை!

பின்னர் குரும்பசிட்டியில்
இவர் என்னை நாடினார்
நான் அவருடன் ஆடினேன்
ஆட்டியவர் அவர்!
"ஆட்டுவித்தவல் யார் ஒருவர்
ஆடாதாரே!"

நடிப்பு, எழுத்து, இயக்கம்
தயாரிப்பு என்று
நாடகத்துறையில்
இவர் ஒரு பல்கலைக்கழகம்



இலட்சிய வேட்கையும்
இறுதிப் பரிசும்
வானொலி நிலையம்
பாடசாலைகள்
சனசமூக நிலையங்கள்
கலை மன்றங்கள்
ஆலய வீதிகள் என்று
கண்ட மேடைகள் பல
கொண்ட புகழ்மாலைகள் கணக்கில

எனினும்
தாளக்காவடிதான்
ஏ.ரி.பொ.வின் புகழ்க்கொடி
என்று இன்றைக்கும் எல்லோரும்
சொன்னபடி!

அந்தத் துரிதக் கால்கள்
நொந்து போயுள்ளன என்னுஞ் செய்தி
எந்தனைக் கலங்க வைக்கின்றது!

எல்லாம் வல்ல அன்னை
எங்கள் முத்துமாரி அம்மன்
தன் அன்பனுக்கு
பாலாம்பிகையின் அகத்தானுக்கு
என் இனிய நண்பனுக்கு
அருள்புரிய வேண்டுகின்றேன்!

# நாடகமே வாழ்க்கையென நின்றீர் வாழி

– சு.குகதேவன் –

அழகுதமிழ் மொழியினுயிர்ப் பண்புதோன்ற
    ஆன்றதமிழ்ப் புலமையினால் நாடகத்தின்
பழகுமுயிர் பண்புநலம் மிளிருமாறே
    பார்வையினால் மேடையினை யீர்க்கச்செய்யும்
ஈழமதில் நாடகநற் சரிதம்தன்னில்
    இசையோடும் விளங்கிடும்நல் முத்துமாகி
பழமாகி ஒளிரும்பொன்னுத் துரையேநீரும்
    பல்லாண்டு பல்லாண்டு வாழி!! வாழி!!

சீர்குரும்பை ஊருமையும் பெற்றதாலே
    சிறந்தவழி அதுவாழ வேண்டும்வண்ணம்
நேர்விளங்கு கலையினொளி விளக்கம்காண
    நெறியினிலே சிறந்திடுநல் ஆசானாகி
கூர்மைபெறு உயிர்ப்பண்பு உணர்விற்தோன்ற
    கூட்டிடும்நல் நடிப்பினிலே தானும்மூழ்கி
சீர்மணக்கும் வகையினிலே நாடகத்தின்
    சிறப்பதனை மெருகுபெறச் செய்தீர் வாழி

கலைமகளின் திருவருளின் பெருமையாலே
    கற்பனைகள் சுரந்தோடும் நாடகத்தின்
நிலையிலுயர் வண்ணமதால் அகவை எட்டில்
    நீளக்கால் பதித்தவுயர் மேன்மையாலே
கலையின்மணம் சுரந்தோடும் காட்சிதானும்
    கண்ணெதிரே வந்துவந்து களிப்பில் ஆழ்த்த
வலையிடுவார் படுதுயரை சம்மாட்டியாரின்
    வாட்டுதலை காட்டிமணம் பெறவேவைத்தீர்



பாலைநறும் தேன்சுவையைத் தந்தேயீர்க்கும்
    பயம்வீரம் ரௌத்திரம்நற் கருணையெள்ளல்
நிலையிலுயர் நவரசமும் தெரியக்காட்டி
    நீலமயில் வேல்முருகன் மாவைவாசன்
கலைமிளிரும் கட்டிடங்கள் மெருகுகாண
    கவின்தாளக் காவடியாம் ஆடல்காட்டி
தலைநிமிர வேண்டும்நம் கலைகளென்ற
    தாகமதும் உளங்கொள்ள வைத்தீர் வாழி

கல்விநலம் பேணியெழில் கூட்டிமேலாம்
    கருத்தரிய நாடகத்தின் உயிரேயாகி
உள்ளமதை உருக்கும்சொல் உணர்விலூறி
    உயிரான பாத்திரத்தில் ஒன்றிமேலாம்
தொல்லறங்கள் சுவைஞர்களின் உளத்திலூற
    சுடரான ஒப்பனையால் படைப்பிலொன்றி
எள்ளலின்றி எப்படைப்பும் ஏற்றேசெய்யும்
    ஏற்றமிகப் பெற்றுயர்ந்தீர் வாழிவாழி

அறிவுநலம் பெற்றேநாம் அவனிமீதில்
    ஆற்றல்மிகு கலையருவிச் சுனையில் நீந்தும்
குறிக்கோளை எம்மனதில் பதியச்செய்யும்
    குணதிசையில் தோன்றுகதிர்ச் சுடரேபோலும்
சீறிவரும் புயலையுமே அரங்கிற்கூட்டி
    சித்திரநல் மரங்களுமே சுழன்றேயாட
பொறியினையே ஈர்த்தழகுக் கருத்தையூட்டும்
    புலமையிலும் உரங்கொண்டீர் வாழிவாழி

நாடகமே நாடகமே என்றே கூறி
நளினமுறு பணிக்குறுதி சேர்க்கும்வண்ணம்
ஆடரங்கே வியந்துமுமைப் போற்றுமாறும்
அறுபதிலும் இருபதொடும் கூடியாடக்
கலையரங்கக் கல்லூரி தனையும்நாடி
கல்விக்கோர் வயதெல்லை இல்லையென்ற
நிலையுண்மை என்பதனைத் தெரியக்காட்டி
நீடுபுகழ் நாடகமே ஆனீர்வாழி

இறுதிப்பரிசு கூப்பியகரங்கள் பக்திவெள்ளம்
இனிக்குமிவை ஓரங்க நாடகமாக
உறுதிபெற குமணன்தலை வாங்கும்காட்சி
உணர்வொன்றச் செய்திடவே எமையும் ஈர்க்கும்
சாகித்திய மண்டலத்தின் விருதுபெற்றும்
சரித்திரத்தில் பொன்னெழுத்தில் பதியச்செய்யும்
மகிமையுறு கலைப்பே ரரசுகொஞ்சும்
மாண்புகலா பூசணமும் பெற்றீர்வாழி

கல்விநலம் காணவழி செய்யும்குருவாய்
கடமையது புரிந்திட்ட வேளைதானும்
மெல்லவரும் கல்வியிலும் மேன்மைகூட்டும்
மெய்யுருகச் செய்யும்நல் நாடகத்தின்
பண்பொழுக கல்விதனை பயிற்றிநெஞ்சில்
பதிந்திடவே வைத்தகுரு நாதன்நீரே
மண்மகிழ் மாதுதமிழ் அன்னைபோற்ற
மாண்புமிகு நாடகமே ஆனீர்வாழி

கவியாக்கம்:
**அன்புமாணவன்**
**இளங்கவி பாரதிபாலன்**
**தெல்லிப்பளை.**



# 1. கலை

*“மனிதன் தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்தின் செல்வாக்கில் அனுபவித்துள்ள உணர்ச்சிகளையும் எண்ணங் களையும் தனக்குள் மீண்டும் எழச்செய்து அவற்றைத் திட்ட வட்டமான உருவங்களில் வெளியிடும்போது கலை பிறக்கிறது” என்பது ரஷ்ய அறிஞர் பிளாக்கனோவின் கருத்து.*

*“கலை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர்புறுத்துவதிலும் மனிதத் திறன் வெளிப்படும் முறைமையாகும்” என்பார் ஹொனிக்மன் என்ற அறிஞர்.*

*கலை, அறிவியலில் இருந்து பல வகைகளில் வேறு படுகிறது. “உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல் என்றால், உள்ளதை உள்ளவாறு உணர்த்துவது கலை எனலாம். அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு வளர்வது அறிவியல் என்றால், உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வன நுண்கலைகள். ஊன்றி நின்று நடப்பது போன்றது அறிவியல் என்றால், தாவிப் பறப்பது போன்றது கலை” என்று இந்த வேறுபாட்டை அறிஞர் மு.வ அவர்கள் விளக்குவார்.*

*எங்கே அறிவியல் விளங்காமல் நிற்கிறதோ அங்கே கலை தொடங்குகிறது. அங்கிருந்து அறிவியலால் உணர்த்த முடியாத உண்மையை உணர்த்துகிறது என்று “லெய் ஹுன்ற்” கூறுவார்.*

*கலையின் மற்றொரு சிறப்பு என்னவெனில் அது ஒருபோதும் அழிவதில்லை. அறிவியல் அறிவு அடிக்கடி மாறும். ஆகவே ஒரு வகையில் அழியும். கலை மனித உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படுவதனால் மனித உணர்வு நிலைக்கும் காலம் வரை சிறந்த கலைகளும் நிலைக்கும். கி.மு 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கத் துன்பியல் நாடகங்களும் ஷேக்ஸ்பியரின் பெயரும் இன்றும் புதிதாய் இருப்பது நாம் அறிந்ததே. மோனாலிசாவின் சிரிப்பு இன்னும் பலரைக் கவர்ந்து கொண்டே இருப்பதன் இரகசியமும் அதுதான்.*

அறிவியலால் பெறும் அறிவு மூளையின் ஒரு பகுதிக்கே விருந்தாகிறது. பயின்ற பிறகு அதன் புதுமைத் தன்மையை இழந்து விடுகிறது. ஆயின் கலை உணர்வினால் பெறும் அனுபவமோ நரம்புத்தொகுதி முழுமைக்கும் விருந்தாகிறது. அதனால் அதன் புதுமைத் தன்மை என்றும் நீங்குவதில்லை. அரிச்சந்திர மயான காண்டத்தை ஆயிரம் தடவை பார்ப்பதற்கும் மக்கள் ஆயத்தமாக இருப்பது அதனால்தான்.

மனித வாழ்வில் அறிவின் பங்கும் உண்டு. உணர்ச்சியின் பங்கும் உண்டு. அறிவு மிகைப்பட்டு உணர்ச்சி குன்றியவர்கள் சட வாழ்க்கை நடத்துவர். அறிவுத் துறையில் மிக மேம்பட்டவர்களும் நெருக்கடியின் போது கலைத்துறையை மருந்தாகத் தேடி வருவதை நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய சம்பவம் ஒன்று ஜோன் ஸ்ரீவாட் மில் என்பாரின் வாழ்வில் நடந்தது. 1928 ஆம் ஆண்டு அவருக்கு வயது 22. அறிவின் உழைப்பால் மிகக் களைத்துச் சோர்ந்த மனநிலையில் இருந்தார். வாழ்க்கையில் ஊக்கம் இழந்தவராய் மிகக் கலங்கியிருந்த நிலையில் "வேட்ஸ் வேர்த்" என்ற புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞரின் பாடல் தொகுதி ஒன்றைப் படிக்கத்தொடங்கினார். தம் மனச் சோர்வை அது மாற்றும் என்று ஆரம்பத்தில் அவர் நம்பவில்லை. ஆனால் அந்த நூல் மிக வியக்கத்தக்க வகையில் அவருக்குள் ஓர் ஊக்கத்தையும் ஆறுதலையும் கொடுத்தது. "என் மனநிலைக்கு வேட்ஸ் வேர்த்தின் கவிதைகள் மருந்தாக இருந்தன. அவை புற அழகை விளக்கவில்லை. அக உணர்ச்சியையும் அந்த உணர்ச்சியோடு இயைந்த கருத்தையும் அழகின் எழுச்சியோடு எடுத்துரைத்தன. அதனையே என் மனம் நாடியது. வாழ்வின் பெரிய பொல்லாங்கு எல்லாம் தவிர்க்கப்பட்ட பிறகு பெறத்தக்க நிலையான இன்பம் எவ்வாறு இருக்கும் என்பதை அப்பாட்டுக் களில் நான் அறிந்தேன்" என்று அவர் தம் வாழ்க்கை வரலாற்றில் எழுதுகிறார்.

கலைகள் நுண்கலைகள், பயன்கலைகள் என இரு வகைப்படும். பெட்டி இழைத்தல், தைத்தல், கூடை பின்னுதல், கேக் ஐசிங் செய்தல் போன்றவற்றைப் பயன்கலைகள் எனலாம்.



நுண்கலைகளை மேலும் காட்சிக்கலை, கேள்விக்கலை, ஆற்றுகைக் கலை எனப் பாகுபடுத்தலாம். பிரதானமாகக் கண்ணுக்கு விருந்தாகும் ஓவியம், சிற்பம் போன்றவற்றைக் காட்சிக் கலைகள் என்றும், பிரதானமாகச் செவிக்கு விருந்தாகின்ற இசை போன்றவற்றைக் கேள்விக் கலைகள் என்றும் கூறலாம். நடனம், நாடகம் போல மேடையில் ஆற்றுகை செய்யப்படும் கலைகள் ஆற்றுகைக் கலைகள் எனப்படும்.

நுண்கலைகள் ஆக்க சிந்தனையைப் பெரிதும் வேண்டி நிற்பவை. கற்பனை, தற்புதுமை, விரிந்த சிந்தனை, உள்ளுணர்வு, மேதாவிலாசம், புதியன காணல் போன்ற இயல்புகளை ஆக்கத் திறன் உள்வாங்கி வைத்திருக்கும்.

ஆக்க சிந்தனையின் படிமுறைகள் பின்வருமாறு அமையும் என்று கவிஞர் சோ.ப. அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

(1) பிரக்ஞை பூர்வமாகத் தொழிற்படும் கட்டம்.
(2) நனவிலி மனம் தொழிற்படும் கட்டம்.
(3) செல்ல வேண்டிய திசையை எடுகோள் குறிப்பாகச் சுட்டும் கட்டம்.

படைப்பு வட்டத்தின் நாலு கட்டங்கள் இவை என்று "கிரகாம் வலஸ்" கூறுவார்.

(1) தயாராதல்
(2) அடைகாத்தல்
(3) உந்தல்
(4) சரிபார்த்தல்

இவ்வாறான ஆக்கச் சிந்தனையின் விருத்தியால் தோன்றும் நுண்கலைகள் உணர்ச்சிகளை வளர்த்திடவல்லவை என்பது உண்மையே. புலன்களை நுண் உணர்வுடையனவாக ஆக்கி வளர்க்கும் தன்மை கலைகளுக்கு உண்டு. அதனால்தான்

சமணரும், பௌத்தரும் கலைகளைப் பெரிதாகப் போற்றவில்லை. ஆனால் சிறந்த கலைகள் புலன்களை வளர்ப்பதோடு அவற்றைப் பயன்படுத்தும் தன்மையும் உள்ளவை என்பதை இந்துசமயம் தெளிவாக உணர்ந்திருந்தமையால் எமது சமயத்தில் நுண்கலைகள் எல்லாம் கோயிற் கலைகளாகவே வளர்த்து எடுக்கப்பட்டன. ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம், நாட்டியம், நாடகம் ஆகிய அனைத்து நுண்கலைகளும் பழங்காலத் தமிழ் நாட்டின் கோயிலைச் சூழ்ந்து வளர்ந்தன.

இயற்கையிலும் வாழ்க்கையிலும் அழகு இருக்கிறதாயினும் அது தெளிவாக இல்லை. கதம்பமாகக் குழம்பிய நிலையில் வேண்டுவன, வேண்டாதன, பொருந்துவன, பொருந்தாதன எல்லாம் கலந்து உள்ளன. ஆதலின் மனம் அவற்றை நன்கு உணர முடியவில்லை. குழம்பிய நிலையை மாற்றி வேண்டுவனவும் பொருந்துவனவும் மட்டும் கொண்டு அமைத்தால் மனம் அதனை வினைத்திறனுடன் நுகரமுடியும். கலை இதைச் செய்து தரக் கூடியது. ஆகவேதான் வாழ்வில் கலை மிக அவசியமாகத் தேவைப்படுகிறது.

அது மாத்திரமில்லை. இயற்கையும் வாழ்க்கையும் தரும் இன்பம் நொடிக்கு நொடி மாறிவிடுகிறது. நாம் வேண்டும் போது கிடைப்பதுமில்லை. கலையோ நாம் வேண்டும்போது இன்பத்தை வழங்கி அதனை நிலைக்கச் செய்கிறது.

வாழ்வின் குழந்தைப் பருவத்தில் மனம் இயல்பான நிலையில் இருந்து, புலன்கள் வாயிலாக அழகு விருந்தை நுகர்கின்றது. ஆனால் வளர வளர வாழ்க்கைச் சுமையும் அதை ஒட்டிய கவலைகளும் பெருகப் பெருக மனம் தன் இயல்பை இழந்து, செயற்கையான போக்கிற்கு அடிமைப்பட்டு இயந்திரம் போல இயங்கத் தொடங்குகிறது. இந்த நேரத்தில் கலை சுவை நிரம்பியதாக அமைந்து, அத்தகைய மரத்துப்போன மனத்தையும் ஈர்த்து நிறுத்தி விருந்து ஊட்ட வல்லதாகிறது.



ஏதோ சில பிரச்சினைகளை வெளிக்கொணருவதிலும் அவற்றிற்கான தீர்வு சொல்வதிலும் கலைகள் காலம் காலமாகப் பணியாற்றித்தான் வந்துள்ளன. ஆயினும் யுத்தச் சூழலில் கலை ஒரு கதாசிஸ் ஆகிறது. சமூகக் கருத்துகள், நடப்பு வழக்குகள், ஒழுக்கப் பண்புகள், களிப்யூட்டுகள், சமூகத்தின் மோதல்கள், இரண்டக நிலைகள், போராட்டங்கள் இவைகளை எடுத்துப் பேசத்தக்க கலைகள் எமது நாட்டின் இன்றைய சூழலில் மக்களின் உளநலத்தைப் பேணிக் காப்பதிலும் முதன்மைப் பங்கு பெறுகின்றன. சித்திரம் கீறுவதும், இசை பாடுவதும், ஆடுவதும், உளமறி நாடகங்களை நடிப்பதும் உள வைத்திய நிபுணர்களால் வெளிப்பாட்டுச் சிகிச்சை முறையாகப் பயன்படுத்தப்படுகிறது.

அடக்கி வைக்கப்பட்ட பயங்கர அனுபவங்களைக் கதை மூலம் வெளிக்கொணர்ந்து நோய் மாற்றும் முறையை "சிக்மன்ட் புரோயிட்" போன்ற உளவியல் அறிஞர்கள் நீண்ட காலத்தின் முன்னரே பாவித்தனர். கதை சொல்லும் முறை இன்று "Narrative Exposure Therapy" எனப்படுகிறது. அந்த வகையில் பார்த்தால் சிறுகதை, நாவல் முதலிய இலக்கியக் கலைகளும் மனிதனைத் தொட்டுத் தூக்கவல்லன.

கலை என்பது இன்னொரு வகையில் சொல்லப்போனால் எம்மை எமக்குக் காட்டும் தளவாடி. அந்தக் கலை எடுத்துக் கொள்ளும் வடிவம், கலைஞனின் மனநிலை, அந்நியக் கலை இலக்கியத் தாக்கம், மரபுகளின் செல்வாக்கு, மரபுகளில் இருந்து விடுபடும் முயற்சி, பயிற்சி, மனக்கிளர்ச்சி, நுகர்வோர் தளவேறுபாடு போன்ற பல காரணிகளில் தங்கியிருக்கும்.

எமது மனம் ஒரு நேரத்தில் இரண்டு விடயங்களைப் பற்றிச் சிந்திக்காது. ஆகவே இயல்பாக நாம் ஒரு கலையில் ஈடுபாடு கொண்டிருக்கும்போது, தேவையற்ற வாழ்க்கைக் கவலைகள், பயங்கள், நெருக்கீடுகள் போன்றவை எமது மனதிற்குள்ளே புகமுடியாது. காற்று நின்ற இடத்தில் அதனை

*வெளியேற்றாது நீர் புகமுடியாது தவிப்பது போலக் கலைப் பிரக்ஞை நிரம்பிய உள்ளத்தில் அதனை வெளியேற்றாது வேறு மறை உணர்வுகள் குடிபுக முடியாது. ஆகவேதான் கலை எப்போதும் கலைஞனுக்கு ஒரு உளப் பாதுகாப்பைத் தருகிறது.*

**ஆடுதல் பாடுதல் சித்திரம் ~ கவி**
**யாதி யினைய கலைகளில் ~ உயிர்**
**ஈடுபட்டென்றும் நடப்பவர் ~ பிறர்**
**ஈன நிலை கண்டு துள்ளுவர்.**

*என்று பாடினான் பாரதி. அநீதியை எங்கு கண்டாலும் துடித்தெழுந்து "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று விவாதிக்கும் நக்கீரத்தனம் கலைஞனுக்கு நிறையவே உண்டு. அதனால் உலகில் அல்லவை பொசுக்கி நல்லவை தழைக்க வைக்க நுண்கலைகள் வல்லவை ஆகின்றன.*

*கலை முயற்சி ஒருவருடைய முழுநேரத்தையும் தனதாக்குவது. ஒன்றை விடாது பற்றி நிற்பது. மனத்தின் முற்று முழுதான செயற்பாட்டை அவாவுவது. அதனால் மனதுக்கு அமைதியையும் சாந்தியையும் கொணர்வது.*

*எமது கல்விமுறை கலைத்திறன் மிக்க மனிதர்களை நிறையவே உருவாக்க வேண்டும். ஏனெனில் கலை இன்றி விஞ்ஞானம் ஒருபோதும் முழுமை பெறாது.*

*முழுமையான கலை வாழ்வு வாழ்பவர் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள். காண்கின்ற காட்சியிலும் கேட்கின்ற ஓசையிலும் மனம் கவிந்து நாட்டத்துடன் திரட்டப்படும் அழகுணர்வை புறக்கருவி வாயிலாகப் புலப்படுத்தும் ஆர்வம் மிக்கவர். கற்பனையை உதவியாகக் கொண்டு அறிவு, ஊக்கம், செயற்திறன் ஆகியவை ஒருமுகப்பட ஒருவகை மோனத் தவத்தின் வெளிப்பாடு போல அவரது நாடகங்கள் வந்தன.*



*காலத்துக்குக் காலம் மக்கள் சமுதாயத்தின் எண்ணங் களையும் உணர்வுகளையும் அழகுணர்வுடன் வெளிப்படுத்தின அவரது நாடகங்கள். அதனால் அவை மக்கள் வாழ்வின் பதிவேடுகளாயின. மக்கள் தம் பண்பாட்டைப் புரிந்து கொள்ளும் ஓர் அளவு கோலாகவும் இவரது நாடகங்கள் விளங்கின.*

*வாழ்வில் ஏற்படும் சோர்வையும் துன்பத்தையும் களையும் கருவியாகவும் இவர் பயன்படுத்திய கலை விளங்கிற்று.*

*"உலகின் பல்வேறு பண்புகளை இணைத்து முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்யும் பண்பு கலையின் இயல்பாதலால் அது மனிதனிடத்து ஒரு முரண்பாடற்ற ஒத்திசைவுடைய தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலுடையதாக விளங்குகிறது. அத்துடன் அவன் மனதில் ஒரு உணர்வுப் பூரணத்துவத்தையும் வாழ்வின் நோக்கமுடைமை பற்றிய உணர்வையும் ஏற்படுத்துகிறது." என்ற யூ.யக்கோவ்வெல்லின் கருத்தும் ஏ.ரி.பியின் நாடகங்களுக்குப் பொருந்தும்.*

*ஏ.ரி.பொன்னுத்துரை என்ற மனிதனுக்கும் அவரைச் சூழவுள்ள சூழலுக்கும் இடையில் ஓர் இசைவை ஏற்படுத்தும் கருவியாகக் கலை விளங்கியது என்றால் மிகையில்லை.*

* * *

என்னைக் கலையுலகில் வளர்த்து விட்டவர்களில் மதிப்புக்குரியவர்களான மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், கலாஜோதி சண்முகநாதன் (சானா), பேராசிரியர். சு. வித்தியானந்தன், திரு. த. இராசரத்தினம் இவர்களுடன் 1974 இல் என்னைக் கலைப்பேரரசு எனப் பட்டஞ்சூட்டிக் கௌரவித்து மகிழ்ந்த கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை விட எனது சக நடிகர்கள், இயக்குனர்கள், ரசிகர்கள் அனைவருமே என்னைக் கைதூக்கிவிட்டனர்.

**ஏ.ரி.பொ.**

# 2. கலைகளின் அரசன் - நாடகம்

மிக ஆதி காலத்திலேயே மக்கள் தங்களைக் கொண்டாடிக் கொள்ளவும் குணப்படுத்திக் கொள்ளவும் வணக்கங்களில் ஈடுபடவும் கடவுளுடன் இடைத்தொடர்பு கொள்ளவும் கதை கூறத் தொடங்கினர். அதுவே காலப்போக்கில் நாடகமாயிற்று.

நாடகம் ஒரு ஆற்றுகைக்கலை. அதாவது நாடகம் என்பது பலர் முன்னே ஒருவர், இருவர் அல்லது சிலர் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றினைச் செய்து காட்டுவது ஆற்றுவது அல்லது நிகழ்த்திக் காட்டுவது என வரைவிலக்கணப்படுத்தலாம். ஆற்றப்படும் கணத்தில் நாடகமானது நம் முன்னே பிரசன்னமாக இருக்கும்.

நாடகம் என்பது உலகத்தைக் கலை அழகுடன் மேடையில் ஏறிவது என்று ஜேர்மன் நாடக ஆசிரியர் பேர்டோல்ட் பிறெச்ட் கூறினார். பார்வையாளர்கள் தமது சமூகச் சூழலை விளங்கிக் கொள்ளவும் அறிவியல் ரீதியாக அதைக் கையாளவும் அரங்கில் வரும் மனித மொடல்களின் வாழ்வு உதவும் என்பது அவர் கருத்து.

பார்வையாளனாகிய மனிதன் தன்னைச் சுயவிமர்சனம் செய்ய வேண்டிய ஒரு நிலையை நாடகம் ஏற்படுத்த வேண்டுமாயின் அது சமூகத்திலுள்ள குறைகளைச் சுட்ட வேண்டும். பக்கம் சாய்ந்து கொள்ள வேண்டும். விவாதங்களை ஆரம்பித்து வைக்க வேண்டும். உலகத்தைச் சரியான திசையில் வடிவமைக்க உதவவேண்டும்.

எல்லாவற்றையும் ஓடவைத்துக் கொண்டிருக்கும் ஓர் ஒழுங்கு குலைந்துவிடுமோ, உலகம் திடீரென இருண்டு விடுமோ, சமூக வாழ்வுக்கு எதிரான சக்திகள் சடுதியாகத் தலை தூக்குமோ போன்ற மனிதர்களின் ஆழ்மனப் பயங்களை விடுவிக்க எங்கள் எல்லோருக்கும் விருப்பம். அந்த விருப்பமே பாத்திரப் பசியாக மாறுகிறது. வாழ்வின் யதார்த்தத்தில் வாழமுடியாத பாத்திரங்



களைக் காணவும், அவை பற்றிச் சொல்லவும் நாம் அனைவரும் விரும்புகிறோம். இது நாடகத்தின் மூலம் சாத்தியப் படுகிறது. இந்தச் சாத்தியப்பாட்டில் ஒரு குணப்படுத்தும் தன்மையும் இருக்கிறது.

ஒரு நடிகன் தீய பாத்திரத்தில் நடிப்பது அவனது ஆளுமையை உடைக்கும் என்று பிளேட்டோ எழுதினார். ஒருவன் நல்ல பாத்திரத்தை எடுத்தாலும் சரி, தீய பாத்திரத்தை எடுத்தாலும் சரி, அவனது நடிப்புப் பார்வையாளர் மத்தியில் நல்ல விளைவையே ஏற்படுத்தும் என்பது அரிஸ்டோட்டலின் கருத்து. அதிலிருந்துதான் அவரது "கதாசிஸ்" கொள்கை கட்டியெழுப்பப் பட்டது. "கதாசிஸ்" (Katharsis) என்பது ஒரு வெளிக் கொணர்கையாகும். பார்வையாளரின் மனதில் உறுத்திக் கொண்டிருந்த ஏதோ சில விடயங்களை வெளிக்கொணர உதவுவதில் காத்திரமான நாடகங்கள் காலம் காலமாகப் பணியாற்றி வந்துள்ளன.

கி.மு 5 ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்த கிரேக்க அரங்கில் அப்பலோவுக்கும் தயோனிசியசுக்கும் இடையில் ஒரு சமநிலையைத் தோற்றுவிப்பதற்குத் தொடர்ச்சியான கடும் முயற்சி இருந்தது. இந்த இரண்டு எல்லையிலுமே அழிவு இருக்கிறது என்பதே பக்கே (Bacchae) என்ற நாடகம் தரும் செய்தியாகும்.

நனவு மனமும் நனவிலி மனமும் ஒன்றை ஒன்று அழுத்திக் காயப்படுத்தும் போது முழுமை அடையப்பட மாட்டாது என்று (G.G.Yung) யுங் என்ற உளவியலாளர் 1916 இல் கூறினார். இந்த இரண்டு கருத்துக்களும் ஒப்புநோக்கத்தக்கவை.

பேர்டோல்ட் பிறெச்ற்றுக்கு மக்கள் எப்படி வாழவேண்டும் என்று கற்பிப்பதே அரங்கின் பணியாக இருந்தது.

உலக வாழ்வில் எம்மை நோக்கி வரும் பல்வேறு தூண்டல்களுக்கான தூண்டற்பேறே கலைப் படைப்புகள் எனக் கொண்டால், நாடகக் கலையில் ஒருவர் தான் சொல்ல வந்த கருத்தைத் துணிந்து சொல்லலாம்.

ஒரு நாடகத்தை எழுதும்போது அதன் கருப்பொருள் ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக இருக்கும்படி எழுதல் சிறப்பு. ஒரு குழுவினரோ அல்லது தனி ஒரு நபரோ இலகுவில் புரிந்து கொள்ளும்படி கருப்பொருள் அமைய வேண்டும். முன்வைக்க விரும்பும் கருப் பொருளைத் தொடக்கூடிய நிகழ்வுகளைச் சிந்திக்க வேண்டும். பல்வேறு காட்சிகளுடாக இந்த நிகழ்வை எப்படி நகர்த்திச் செல்வது என்று தீர்மானிக்க வேண்டும். நிகழ்வுகள் பின்னர் சிறுசிறு சம்பவங்களாகப் பிரிக்கப்பட்டு உச்சத்தை நோக்கி வளர்த்துச் செல்லப்பட வேண்டும். ஒவ்வொரு காட்சிக்கும் ஒரு தொடக்கமும் ஒரு முடிவும் இருக்கும். முதல் காட்சியைத் தொட்டு வளர்ந்து அடுத்த காட்சியுடன் இணைவதாக இக்காட்சிகள் அமையும். ஒவ்வொரு காட்சிகளும் தமக்கிடையில் உறவுகளையும் தொடர்புகளையும் கொண்டிருக்கும் நிகழ்வுகளின் ஓட்டத்தில் புதுமை எதையும் சேர்க்காத ஒரு காட்சி நாடகத்தில் அவசியமில்லை.

நாடகத்தை எழுதும் ஒருவர் அதன் கட்டமைப்பை முதலில் மேலெழுந்த வாரியாகத் தீர்மானிப்பார். நாடகத்தில் வரும் பாத்திரங்களையும் தீர்மானிப்பார். அவர்களுக்கிடையேயான உரையாடல்களை நிச்சயப்படுத்திக் கொள்வார். அதன் பிறகு திருத்தமான நாடக எழுத்துருவை ஆக்கிக் கொள்வார்.

இவ்வாறு எழுதப்பட்ட ஒரு நல்ல நாடகம் அதிக தூரம் பார்க்கும். பிரச்சினைக்கு விடை அளிக்கும். புதிய சமுதாயத் தேவைகளைச் சுட்டும். நிறைவுக்கும் முதல் முயற்சி செய்யும்.

ஒரு நல்ல நாடகம் பாறையைப் போல ஆழமாகவும் அமைதியாகவும் அழகாகவும் இருந்து பார்வையாளரின் ஒவ்வொரு அவசரத் தட்டுக்குப் பதில் சொல்லும்.

பெரிய விடயங்களை நினைப்பதும், பெரிய விடயங்களை அடைவதற்காகப் பிரார்த்திப்பதும், பெரிய விடயங்களை நம்புவதும் பெரிய விடயங்களைச் செயற்படுத்துவதும் வாழ்வின் இலட்சியங்களை அடைய உதவும் என்று சொல்வார்கள். நாடகம் எதையுமே சற்றுப் பெரிதாகக் காட்டும்.



ஒரு நாடகத்தைப் பார்க்கும்போது, நாடகம் பார்க்கிறோம், என்ற உணர்வு இருக்க வேண்டுமா இல்லையா என்பது விவாதத்திற்குரிய விடயமாய் இருக்கிறது. பார்வையாளர் அனைவரும் நாடகத்தோடு ஒன்றிப் போகும்படி நடிகன் பாத்திரமாய் மாறி நடிக்க வேண்டும் என்பது ஸ்ரனிஸ் லவ்ஸ்கி போன்றோரின் கருத்து. பார்வையாளர் நாடகத்தில் இருந்து விலகி மூன்றாமவராய் இருக்க வேண்டும். பார்வையாளரை அந்நிய மயப்படுத்தத் தேவையான அளவு நாடகம் பல உத்திகளைக் கொண்டிருக்க வேண்டும். நடிகர்களும் பாத்திரங்களைப் போலச் செய்ய வேண்டுமே ஒழியப் பாத்திரமாய் மாறிவிடக்கூடாது என்பது பேர்டோல்ட் பிறெச்ற்றின் கருத்து. உளவியல் நிபுணர்கள் பிறெச்ற்றின் கருத்தையே அதிக அளவு ஏற்றுக் கொள்கிறார்கள்.

நாடகம் என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடு. அழகைக் கண்டுபிடித்தலும் அதனை வெளிப்படுத்தலும் நாடகத்தின் மூலம் பூர்த்தியாகும். தான் பெறுகின்ற அனுபவத்தைப் பிறரும் அனுபவிக்க வைக்க நாடகம் உதவும்.

நாடகத்தைக் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் அனுபவிக்க முடியும் என்பதால் அது கட்புல செவிப்புலக் கலை எனப்படுகிறது.

நாடக ஆற்றுகைக்கு வெளி அவசியமாக இருப்பதால் அது வெளிக்கலை என்றும், நாடக ஆற்றுகையை நேரம் மட்டுப் படுத்துவதால் அது நேரக் கலை என்றும் சொல்லப்படும். நாடகம் என்பது கணந்தோறும் மாறிக் கொண்டேயிருக்கும் அதே சமயம் பார்வையாளரிடமிருந்து ஒவ்வொரு கணமும் மறுதாக்கத்தைப் பெற்றுக் கொண்டேயிருக்கும் என்பதால் மறுதாக்கக் கலை எனப்படும்.

நாடகம் என்பது கலைக்கரசு. நாட்டின் நாகரிகத்தின் கண்ணாடி. பாமரர்களின் பல்கலைக்கழகம். உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும்

அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை என்பது ஔவை சண்முகம் அவர்களின் கருத்து. "கலாசாரப் படைப்பிலே பேனா முனையிலும் பார்க்க உத்வேகமும் உடன்பயனும் ஊடு செறிவீச்சும் மிக்கது நாடகக்கலை" என்பது நாடகவியலாளர் இ.சிவானந்தன் அவர்களின் எண்ணம்.

மேடை என்பது, நாடக நிகழ்வு கட்புலனாக முகிழ்த்தெழும் இடத்தைக் குறிக்கும். நாடகம் ஒன்று எழுதப்படுவதாலோ, பாடப் படுவதாலோ நாடகம் ஆகாது. அது நடிக்கப்படுதல் வேண்டும். நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப்படுவது "அரங்கின்றி நாடகம் இல்லை" எனக் கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுவார்கள்.

தற்காலப் போக்கில் அரங்கு என்பது வெறுமனே நாடகம் நிகழ்த்தப்படும் இடத்தைக் குறித்து நில்லாமல் நாடக வகை, நாடகம் நிகழ்த்தப்படும் முறைமை, நடிப்பின் தன்மை, நெறியாள்கை, நாடகம் சொல்லும் செய்தியின் தன்மை, சொல்லப்படும் முறைமை, பார்வையாளரின் நிலை என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறும் நாடகம் வட்டக் களரியையும், படச்சட்ட மேடையையும் விட்டு வெகு தூரம் விலகி வந்துவிட்டது. பார்வையாளர், ஆற்றுவோர் என்ற வேறுபாடு மெல்லக் குறைந்து வருகிறது. பார்வையாளர் கலந்துரையாடும், விவாதிக்கும் அரங்குகள் இன்று பெறுமதி மிக்கவையாய் மாறிவருகின்றன. அது மாத்திரமின்றித் திரள் அரங்குகளும் கண்ணுக்குப் புலனாகாத அரங்குகளும் தோன்றியுள்ளன.

நாடக எழுத்துரு என்னும் இலக்கியம், பாடல், ஆடல், வாத்தியங்கள், வேடஉடை, நடிப்பு, ஒப்பனை, மேடை அமைப்பு, ஒளி அமைப்பு, ஒலி அமைப்பு, ஓவியங்கள் எனப் பல கலைகளும் நாடகத்தில் சம்பந்தப்படுவதால் நாடகம் ஒரு கூட்டுக்கலையாகிறது.



நல்லதோர் நாடகத்தைப் பார்த்து முடிய ஒரு அமைதி, நிறைவு, இரகசிய சிந்தனை ஆகியவை வரவேண்டும். நாடகத்தில் கொள்கைப் பிரகடனம் அவசியமில்லையாயினும் அதுதான் எடுத்துக் கொண்ட மையக் கருத்திலிருந்து பிறழாமல் இறுதிவரை செல்லவேண்டும். தான் சொல்ல வந்த கருத்தை ஒரு உன்னத நாடகம் எல்லாருக்கும் தொற்ற வைக்க வேண்டும். நாடகம் நிறைவடையும் போது இந்தச் சமூகம் இப்படிப்பட்ட மனிதர்களையே எப்போதும் பிரசவித்து வருகிறது என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நாடக எழுத்தாளனுடையதும் நடிகர்களுடையதும் ஆன்மாவில் பட்ட காயங்கள் தம்மை ஆற்றிக்கொள்ள நாடகங்களாய் மேலே வருகின்றன. எம்மைப் புதிதாய் எமக்கே நினைவுபடுத்தும் நாடகம் மனித உணர்வுகளில் ஆழ்ந்த மீட்டல் செய்து புதிய பிரக்ஞையை உண்டாக்க வல்லது.

நாடகக் கலை ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களின் மனதின் சுவாசம். நமது சிந்தனைக் கூட்டைக் கிளறிப் பிய்த்துப் பிடுங்கி அதிலிருந்து தேன் எடுக்கக்கூடிய நாடகங்களை அவர் ஆக்கினார்.

* * *

மரபுக் கலைஞர்களர் புதியதை ஒதுக்குவதோ, புதுமைக் கலைஞர்கள் மரபை ஒதுக்குவதோ கூடாது. பார்ப்போருக்கு பயன்தரவல்ல நாடகத்தை வழங்குவதே பிரதானமாகும். எனவே நாம் அறிந்தவற்றைப் பிறருக்குப் பயிற்றுவிக்கும் அதேவேளை அறியாதவற்றைப் பிறரிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும். அரங்கக் கல்லூரியில், தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம் போன்றோரின் நெறியாள்கையில் பலமேடை நாடகங்களிலும் நடித்தேன். பல விருதுகளைப் பெற்ற தாசீசியஸின் "பொறுத்தது போதும்" நாடகத்தில் சிறந்த குணச்சித்திர நடிகருக்கான விருதைப் பெற்றேன்.

ஏ.ரி.பொ.

# 3. கல்வி

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"

என்பது வள்ளுவர் வாக்கு. செல்வங்களில் பெரியது கல்விச் செல்வம்.

கல்வி என்பது ஒருவரை அவர் முன்னர் நடந்துகொள்ளாத விதமாக நடந்து கொள்ளச் செய்வது என்று அறிஞர் ரஸ்கின் கருதினார். கல்வி ஒருவரது ஆளுமையை வளர்க்கும். ஆளுமை விருத்தி நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும்.

கல்வி ஒரு ஆயுதம். யார் அதை வைத்திருக்கிறார்கள், யாரை அது குறி பார்க்கிறது என்பதிலேயே அதன் விளைவு தங்கியுள்ளது என்பார் ஸ்டாலின். நல்ல ஆசிரியர்கள் கையில் கல்வி வரும்போது அது பலருக்கும் பயன் தருவதாய் அமையும். பிள்ளைகள் தகுந்த ஆசிரியர்களிடம் பயிலும்போது உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியம் உள்ளவர்களாக ஆகின்றார்கள். சாம்ராஜ்ஜியங்களின் தலைவிதி இளைஞர்களின் கல்வியில் தங்கியுள்ளது என்றார் அரிஸ்டோட்டல். இன்னொரு வகையில் சொல்லப் போனால், சாம்ராஜ்ஜியங்களின் தலைவிதி நல்ல ஆசிரியர்களின் கையில் தங்கியுள்ளது.

மனிதர்கள் எல்லாரும் கற்க விரும்புகிறார்கள். கற்றல் மகிழ்வானது. கற்கும்போது சுரக்கப்படும் "எண்டோபின்" என்ற பதார்த்தம் இந்த மகிழ்வை ஏற்படுத்துவது.

மன்னுயிர்க்குப் புவியினிலே பசி ஒன்றாகும்
மானிடர்க்கோ என்றென்றும் பசி இரண்டாம்
துன்னுமுயர் கல்வியினைப் பெறுவோமென்று
துடிக்கின்ற அறிவென்னும் பசியதாகும்

என்பார் புலவர் ம.பார்வதிநாதசிவம்.



வயிற்றுப் பசியைப் போக்குபவர்கள் பெற்றார். அறிவுப்பசியைத் தீர்ப்பதற்காகவே பிள்ளைகள் பாடசாலைக்கு வருகிறார்கள். சிறந்த ஒரு ஆசிரியர் திறன் விருத்தி செய்பவராக இருப்பார். அர்ப்பணிப்புடன் செயற்படுவார். இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் அனைத்திலும் ஈடுபடுவார். அறிவுறுத்தும் தலைவராக இருப்பார். பாடசாலைக்கு வெளியிலும் பிள்ளைகளைக் கற்பிப்பார். பாடசாலையில் மட்டும் படிப்பிக்கப்பட்ட பிள்ளை, படிக்காத பிள்ளை என்பது அமெரிக்கத் தத்துவஞானி ஜோர்ஜ் சந்தாயனின் கருத்து.

கல்வி என்பது ஒரு வகையில் ஆற்றைப் போன்றது. ஆழம் கூடினால் அமைதியாகும். நல்ல ஆசிரியரிடம் படித்த பிள்ளைகள் சமூகத்தில் சான்றோராக மிளிர்வர். சமூகத்தை அமைதிப்படுத்துவர்.

சின்ன விழிகள் மின்னச் சிறகை நீட்டிப் புன்னகைத்துப் புது உலகைப் புதிரோடு பார்த்துக் கற்க முனைபவர்கள் சிறுவர்கள். அவர்களுக்குள் வரும் வினாக்கள் ஏராளம். அவர்களின் ஆளுமை நிறைவாகும்படி அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் ஆற்றல்கள் வெளிக்கிளம்பும்படி கற்பித்தல் கடினம். ஆசிரியர் ஒவ்வொரு குழந்தையின் இதயத்திற்கும் செல்லும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பார் ரஷ்ய எழுத்தாளர் வசீலி சுகம்லீன்ஸ்கி. ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கிற சொந்த உலகம் விரிந்து செழிக்க ஆசிரியர் உதவவேண்டும்.

ஆசிரியர்கள் ஒரு மனிதனுடைய ஆளுமையை உருவாக்குபவர்கள். ஒரு மனிதனுடைய சிறப்பு என்பது அவனது தனி ஆளுமையே. அவன் இந்தப் பரந்த உலகில் வேறு யாரையும் போலவும் இல்லாமல் தனி இயல்புகளுடன் காணப்படுகிறான். இயற்கையின் விசைகளினிடையே அவன் தனித்துவப் பண்புகளுடன் ஆக்கப்பட்டிருக்கிறான். மற்றைய ஒவ்வொரு மனிதனுடனும் சேர்ந்தும் பிரிந்தும் தன் வாழ்வு எல்லைக்குரிய

*காலப்பகுதியில் தனக்கு உரிய ஒரு முறையில் அவன் வாழ்கிறான். அவனை உருவாக்கியவர் ஒரு ஆசிரியர். அதனால்தான் ஒரு சமுதாயத்தை அடிமைப்படுத்த வேண்டுமெனில் அதன் கல்வியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றார் தென் ஆபிரிக்க இனவெறிப் பிரதமர் வேர்வூட்.*

*பாடசாலைகளில் இப்போது விழுமியம் மிக வேகமாகச் சரிந்து வருகிறது. நேர்மை, கூட்டுறவு, சுதந்திரம், மகிழ்வு, பணிவு அன்பு, சமாதானம், மதிப்பு, பொறுப்பு, எளிமை, பொறுமை, ஒற்றுமை ஆகிய பண்புகள் ஆசிரியர்களிடமும் அதிபர்களிடமும் இருந்தால் மாணவர் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு தமது நடத்தைகளை உருவாக்குவர். விழுமியங்களைச் செயற்படுத்தும் ஆரோக்கிய ஆளுமை கொண்டவர்களையும் ஆக்கத்திறன் வாய்ந்தவர்களையும் இனங்கண்டு அவர்களை ஆசிரியராக்க வேண்டிய தேவை சமகாலத்தில் எழுந்துள்ளது.*

*ஒருவருடைய சால்பு என்பது அவர் வாழ்வு பற்றிக் கொண்டிருக்கும் நோக்கையும் அது சமூகத்திற்குப் பயன்படுமாற்றையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட வேண்டும். அந்த வகையில் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்குக் கண்வைத்த சிறந்த ஆசிரியர். ஏனெனில்,*

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்

*என்பது வள்ளுவப் பெருந்தகையின் கருத்து.*

**A Station master minds the train, where as**
**A School master trains the mind.**

*என்று சொல்லுவார்கள்.*

*ஏ.ரி.பொன்னுத்துரை என்ற நிறைவான கல்விமான் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் மனதை நாடகக் கலையூடாகப் பயிற்சி கொடுத்து அமைதிப்படுத்தினார்.*



**காசு தேடுதல் இங்கொரு இலட்சியம்**
**கடலைத் தாண்டுதல் கூட இலட்சியம்**
**வீசு காற்றையும் கட்டிப் போட்டொரு**
**பிஸ்னஸ் செய்தல் இன்னொரு இலட்சியம்**
**ஊசியின் முனை நுழையக்கூடிய**
**ஒவ்வொரு நாட்டையும் தேடித்தேடிப் போய்**
**ஓசி வாழ்க்கை வாழ்ந்திடல் ஆகிய**
**உயர்ந்த இலட்சியம்...........**

*தமிழருக்குள்ள போது (கவிஞர் சோ.பவின் கவிதை) எமது நாட்டில் தொடர்ந்து வாழ்ந்து இளைஞர்களை நெறிப்படுத்தி வாழ வைப்பதில் ஈடுபட்ட ஆசிரியர் இவர். ஆகவே இவரை ஆசிரிய திலகமெனில் தவறில்லை.*

* * *

இன்று மிகவும் அருகிப்போன கலை வடிவமாகவே தாளக்காவடி காணப்படுகின்றது. அழியக்கூடிய நிலையில் உள்ளது என்று கூறலாம். இதற்கான காரணம் யாதெனில் எமது பாரம்பரிய கலைவடிவங்களைப் பேணுவதில் நாம் அக்கறை காட்டாமையே ஆகும். அண்ணாவிமார் எண்ணிக்கை குறைந்து சென்றதும் யுத்த சூழலில் மன நிம்மதி அற்ற நிலையில் கலை வளர்க்கக்கூடிய மனோநிலையை ஏற்படுத்துதல் கடினமாகியதும், ஆங்கிலம் பேசும் மத்திய வர்க்கத்தினரின் எழுச்சியும் இக்கலை வடிவங்கள் அருகிச்செல்ல காரணமாக உள்ளன. வடமோடி, தென்மோடி நாடகங்கள் பல்கலைக்கழக ரீதியில் வளர்த்தெடுக்கப்பட்டதால், இன்றும் அவை அழியாது பேணப்படுகின்றன. தாளக்காவடி ஓர் ஆலயக் கலையாகவும் காணப்படுவதால் ஆலய நிருவாகஸ்தர்களும் இக்கலையைப் பேண முன்வரவேண்டும். புதிய புதிய மண்டபங்கள் அமைத்தல், வாகனங்கள் செய்தல் என்பவற்றுக்கு பணத்தைச் செலவிடும்போது, இது போன்ற கலை வடிவங்களைப் பேணவும் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

**ஏ.ரி.பொ.**

# 4. கலைஞர்

நாம் கடற்கரைக்குப் போவோம். கற்கள் பலவற்றைக் காண்போம். கவலையின்றி அப்பாற் சென்றுவிடுவோம். ஆனால் சிறுவர்கள் இவற்றைக் காணின் அழகிய கற்களையும் ஊரிகளையும் சிப்பிகளையும் பொறுக்கி அவற்றை ஒழுங்காக அடுக்கி விளையாடுவர். சிற்றில் இழைத்து மனதுக்கும் கண்ணுக்கும் இன்பம் ஊட்டுவர். ஒழுங்கற்றுக் கிடக்கும் பொருள்களையும் விடயங்களையும் ஒழுங்குற அமைத்து அழகு பெறச் செய்யும் இந்த ஆர்வம் மனிதனுக்கு இயல்பாக உள்ளது. இது குழந்தைப் பருவத்தில் தெளிவாகத் தெரியும். மனிதன் வளரும்போது செயற்கையான வாழ்வுக் கவலைகள் இந்த ஆர்வத்தை மழுங்கடித்து விடுகின்றன. தம் வாழ்வின் இறுதிக் காலம் வரை இத்தகைய தூண்டல் மங்காமல் வாழ்பவன் கலைஞன். அதனால்தான் நோய்வாய்ப்பட்டு இயலாதிருக்கும் இந்நிலையில் கூட முச்சக்கரவண்டி பிடித்தேனும் இலக்கிய ஒன்று கூடல்களுக்குத் தப்பாமல் வந்து விடுகிறார் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள்.

கலைஞர்களும் ஏனைய மனிதர்களைப் போல மண்ணின் மீது வாழ்பவர்களே. ஆனால் சில நேரத்தில் அவர்களின் மனம் மிக உயர உயரப் பறக்கும். அவர்களின் சொந்த வாழ்வில் கஷ்டங்கள் இருக்கலாம். இருந்தும் இதயம் உயரப் பறக்கும் நேரங்களில் விழுமியம் நிறைந்த எண்ணங்களும் உணர்வுகளும் அவர்கள் மனதில் வரும். அந்நேரத்தில் மின் ஒளி போல மிக உயர்ந்த உண்மைகள் அவர்களுக்குப் புலனாகும். அவர்களுக்கு அமைந்த படைக்கும் திறனைக் கொண்டு அந்த உணர்வுகளுக்குக் கல்லாலோ, சொல்லாலோ, ஒலியாலோ, இசையாலோ, மொழியாலோ அவர்கள் நிலையான கலை வடிவம் தருவர். அந்தக் கலை அழியாமல் நின்றுவிடும். கலைஞருக்கும் அது அழியாப் புகழைக் கொண்டு வந்துவிடும்.



**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று**

என்ற குறள் கலைஞர்களைப் பார்த்துத்தான் தெய்வப் புலவர் மனதில் தோன்றியிருக்கும்.

1934 இல் இருந்து இயங்கிவரும் புகழ்பெற்ற நிறுவனம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை. நாற்பதுக்கு மேற்பட்ட எழுத்தாளர், கலைஞர்களின் நூல்களை வெளியிட்ட அந்த நிறுவனத்தின் நீண்ட காலக் காரியதரிசி, பின் தலைவர் ஏ.ரி.பொ. சன்மார்க்க சபையும் ஏ.ரி.பொவும் வேறல்ல. ஒன்றே என்று கூறினால் மிகையல்ல. 1990 க்குப் பிறகு இடம்பெயர்ந்த நிலையிலும் இணுவிலை மையமாக வைத்துச் சன்மார்க்க சபை தன் பணிகளில் சிலவற்றைச் செய்து வருகிறது.

யாழ் இலக்கிய வட்டத்தோடும் இவருக்கு நீண்டகாலத் தொடர்பு உண்டு. அந்த நிறுவனத்திலும் பல முக்கிய பதவிகளை அவ்வப்போது வகித்து வருகிறார். ஆயினும் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தில் சேர்ந்து செயற்பட்டபோதுதான் அவரது ஆளுமையை என்னால் முற்றாகத் தரிசிக்க முடிந்தது.

ஆளுமை என்றால் என்ன? உளவியல் மாணவன் ஒருவன் எழுப்பக்கூடிய மிகக் கடுமையான வினாக்களில் ஒன்று இது. பொதுவாக ஆளுமை என்பது ஒருவரின் ஆற்றல்கள் நம்பிக்கைகள், மனப்பாங்குகள், கொள்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை மட்டுமில்லை - ஒருவரது உணர்ச்சித் தூண்டற் பேறுகள், மனநிலைகள் அவரிடத்தில் செயற்படும் சக்தி மட்டங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும் ஒரு சொல்.

“பேர்சனாலிட்டி” என்ற சொல்லின் மொழிக்குரிய அடி வேரைத் தேடுவோமாயின் புராதன லத்தீன் மொழியில் “பேர்சோனா” என்ற சொல் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களைத் தரும் சொல்லாகப் பாவிக்கப்பட்டு வந்தது.

(1) ஒருவர் மற்றவர் முன்னே தோன்றும் நிலை.
(2) ஒருவர் தனது வாழ்வில் எடுக்கும் பாத்திரம்.
(3) ஒருவரை அவரது தொழிலுக்குப் பொருத்தமுடையவராக ஆக்கும் அவரது தகைமைகளின் கூட்டுமொத்தம்.
(4) ஒருவரது தனிப்பட்ட முத்திரை.

ஒரு மனிதனுடைய உண்மைத் தன்மைக்கும் அவனது வெளித்தோற்றத்துக்கும் இடையே உள்ள இரண்டகத் தன்மையைக் குறிப்பதாகவே இந்தச் சொல் மெதுவாக வளர்ந்து வந்துள்ள நிலையைப் பார்க்கலாம். இந்தச் சொல்லின் மொழியியல் சார்ந்த அடிப்படையிலேயே ஒரு உண்மை சொல்லப்படுகிறது. வெளியே தோற்றமளிக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளே, வெளியே தெரியாத, தனிப்பட்ட, சில சமயங்களில் முற்றிலும் வித்தியாசமான ஒரு மனிதன் இருக்கிறான். இந்த அக மனிதன் வெளியே தெரியும் மனிதனை விட அதிக அளவு உண்மையானவன். அதிக அளவு நேர்மையானவன்.

ஏ.ரி.பொ. என்ற மனிதனின் உள்ளே இருக்கும் அக மனிதனை எமக்கு முழுமையாக அறிமுகம் செய்தது தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்.

1986 ஆம் ஆண்டின் வசந்தகாலம். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த நான் அப்போது குடியிருந்தது தெல்லிப்பழையில் விழிசிட்டி என்ற அழகிய அமைதியான கிராமத்தில். 1980 இல் இருந்து எனது சிறுகதைத் தொகுதிகள், நாவல் என மூன்று, நாலு நூல்கள் வெளிவந்திருந்தன.

ஒரு இனிய மாலைப்பொழுதில் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களும் அருட்வை.நாகராஜன் அவர்களும் எமது இல்லத்திற்கு வந்து தெல்லிப்பழையில் ஒரு இலக்கிய அமைப்பை உருவாக்குவது பற்றிப் பேசினர். அப்பிரதேசத்தின் கலைஞர்களுள் சிலரை இவ்வாறு சந்தித்துக் கலந்துரையாடிய பின் 05.09.1986 இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் உருவாயிற்று.



இயல், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் சார்ந்த கலை நிகழ்வுகள், கருத்தரங்குகளை நடத்துதல், நூல்களை அறிமுகம் செய்தல், ஆய்வு செய்தல், கலைஞர்களை அழைத்துச் செவ்வி காணலும் கௌரவித்தலும், கள உறுப்பினர்களின் கலை இலக்கிய ஆற்றலை மேம்படுத்தலும், சாதனை புரியும்போது கௌரவித்தலும், களம் சார்ந்த பிரதேசக் கலை இலக்கிய வளங்களைப் பேணுதலும், கலைஞர்களை ஊக்குவித்தலும், இளம் தலைமுறையினரைக் கலை இலக்கியத் துறையில் வழிப்படுத்தி வளம்படுத்தல், கலை இலக்கியம் சார்ந்த நூல்களை வெளியிடுதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, அக உலக யதார்த்தத்தினால் வடிவமைக்கப்பட்ட ஒரு மனிதனாகக் கலைப்பேரரசு அவர்களை எமக்குக் காட்டியது.

பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்த அமைப்பில் கலைப்பேரரசு அவர்கள் இணைச் செயலாளர்களில் ஒருவராகவும் நாடகத்துறைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். திருமதி கௌசலா சுப்பிரமணியன், திரு.அருட்வை. நாகராஜன், சைவப்புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் சி.அப்புத்துரை, திரு.கி.மகேந்திரராஜா, கலாகேசரி ஆ. தம்பித்துரை, திரு. எஸ்.பாலசுந்தரம், திருமதி. எஸ்.சிதம்பரநாதன், திருமதி வ.இராமலிங்கம் ஆகியோருடன் நானும் மத்திய குழுவில் அங்கம் வகித்தேன்.

மனிதனே யதார்த்தத்தைப் படைக்கிறான் என்ற கூற்றுக்கு இலக்கணமாக இருந்த கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் எம்முடன் இணைந்து களத்தினூடு செய்த பணிகள் பல.

17.09.1986 இல் "இன்றைய நாடக அரங்கு" என்ற பொருளில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களைச் செவ்வி கண்டோம்.

08.11.1986 இல் நடைபெற்ற களத்தின் மூன்றாவது ஒன்றுகூடலில் வெறியாட்டு, தியாகத் திருமணம். தர்மயுத்தம் ஆகிய நாடகங்களை இவர் அறிமுகம் செய்து உரையாற்றினார்.

30.11.1986 இல் நடைபெற்ற கலைவிருந்தில் இவரது தாளக்காவடி தனி நடிப்பை அனைவரும் பார்த்து ரசித்தோம்.

03.12.1986 இல் நடைபெற்ற சிறுகதை நிகழ்வில் சிறுகதை எழுதும் முறை பற்றிக் கல்லூரி மாணவருக்கு உரையாற்றினார்.

01.08.1987 இல் நடந்த கலை இலக்கியக் களத்தின் ஒன்பதாவது ஒன்று கூடலில் ஏழு நாடகங்கள் என்ற நூல் அறிமுகம் நடைபெற ஏற்பாடுகள் செய்தார்.

02.04.1988 இல் நடைபெற்ற பத்தாவது ஒன்றுகூடலில் "அண்மைக் காலச் சிறுகதைகள்" பற்றிக் கருத்துரையாற்றினார்.

30.04.1988 இல் கலை இலக்கியக்களம் இவரது மணிவிழாவைச் சிறப்பாக செய்து முடித்தது. அந்நாளில் களத்தின் நாடகவியல் மாணவர் அனைவரையும் இவர் கௌரவித்தார்.

1987 ஆம் ஆண்டு முதல் வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகமும் அரங்கியலும் பரீட்சைக்குக் கலை இலக்கியக் கள மாணவர்கள் தோற்றிச் சித்தியடையப் பெரும் உந்துசக்தியாக இருந்தார்.

19.11.1988 இல் நடந்த களத்தின் பதினெட்டாவது ஒன்றுகூடலில் இவரது தாளக்காவடி நூல் அறிமுகம் செய்யப் பட்டது. புலவர் ஈழத்துச் சிவானந்தன், சைவப்புலவர் சு.செல்லத்துரை, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நூலை அறிமுகம் செய்தனர். அதே நாளில் வி.வி.வைரமுத்து அவர்களுடன் நாடகப் பாடல்கள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற ஏற்பாடு செய்திருந்தார்.



12.08.89 இல் நடைபெற்ற நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

17.03.1990 இல் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடகக் கலைஞர் திரு.க.சிதம்பரநாதன் அவர்களுடனான கலந்துரையாடலே தெல்லிப்பழையில் நடைபெற்ற நாடகம் தொடர்பான இறுதி நிகழ்வாக அமைந்தது.

இடம்பெயர்ந்து இன்னலுற்ற நிலையிலும் 16.03.91, 17.03.91 ஆகிய தினங்களில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கவிதைப் பட்டறை நிகழ்வில், இரண்டாம் நாளில் பார்வையாளர் விமர்சனக் குறிப்புகளைத் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

07.07.1991 இல் தாவடி இ.த.க பாடசாலையில் நடைபெற்ற களத்தின் முப்பத்து இரண்டாவது ஒன்றுகூடலில் திரு.வீ. என்.செல்வராஜா. திரு.பீ.கனகரத்தினம், திரு.வீ.செல்வரட்ணம் ஆகிய இசை நாடகக் கலைஞர்களின் செவ்வியை நெறிப்படுத்தினார்.

26.07.1992 இல் மணிவிழா நாயகர் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் பாராட்டு விழாவில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

30.10.1995 இல் யாழ்ப்பாணத்தில் பாரிய இடப்பெயர்வு நிகழ்ந்தது. அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரும் மிகப் பயங்கரமாக இருந்த ஒரு காலகட்டத்தில் 22.10.1995 இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த களத்தின் முப்பத்தொன்பதாவது ஒன்றுகூடலில் கலாகேசரியும் தேர்ச்சிறப்புக் கலையும் என்ற நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார்.

வடமராட்சி, தென்மராட்சியில் இருந்து மீண்டும் வலிகாமம் திரும்பிய பின்னர் 14.04.1997 இல் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கள நிகழ்வில் "நாடகத்தில் ஆளுமை" எனும் தலைப்பில் கருத்துரை ஆற்றினார்.

07.08.1998 இல் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் மணிவிழாவில் இவர் எழுதிய அரங்கக் கலைஞர் ஐவர் என்ற நூல் வெளியிடப்பட்டது.

மேலே கூறப்பட்ட கள நிகழ்வுகளில் இவர் நேரடியாகப் பங்கு பற்றியிருந்த போதிலும், களத்தின் ஏனைய இலக்கிய, இசை நிகழ்வுகள் அனைத்திலும் கூட இவரது மறைமுகமான பங்களிப்பு இருந்தது.

ஒரு கலைஞனுடைய புலக்காட்சிகள் வேறுபட்டவை. சிலவற்றை இன்னொருவரால் தரிசிக்க முடியாது. ஆயினும் இரண்டு விடயங்கள் மிகத் தெளிவாக அவதானிக்க முடிந்தவை.

(1) இவருக்கு எப்போதும் மற்றொரு கலைஞனைத் தூக்கிவிடும் விமர்சனமே பிடித்தமானது. எந்த ஒரு கலைப்படைப்பிலும் அதிகளவு குறை சொல்லும் விமர்சகர்களை, நக்கல், குத்தல் பேசுவோரை இவருக்கு அறவே பிடிக்காது. அப்படியானவர்களை நாம் கலை இலக்கிய நிகழ்வுக்கு அழைக்க முற்பட்டால் அதைக் கடுமையாக எதிர்ப்பார்.

(2) கலைக்காகக் காசை விட்டெறிவதில் ஒருபோதும் தயக்கம் காட்டமாட்டார். "இந்த நிகழ்ச்சிக்கு நான் ஆயிரம் போடுறன். நீங்களும் உங்களுடைய வசதிக்குப் போடுங்கோ. நிகழ்ச்சியை நடத்துவம்" என்று பேசும் அவர் குரல் இன்றும் என்காதில் ஒலிக்கிறது.

ஸ்பிராங்கரின் விழுமிய வகையில் ஏ.ரி.பொ அழகியல் வகை மனிதர் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது.



"நூல் எழுதுவது என்பது களைப்புத் தரும் போராட்டம்" என்பார் ஜோர்ஜ் ஓவெல். ஆயினும் கலைப்பேரரசு பின்வரும் நூல்களை எழுதித் தள்ளினார்.

* நாடகம் - ஓரங்க நாடக நூல்
* கூப்பிய கரங்கள் - ஓரங்க நாடக நூல்
* பக்தி வெள்ளம் - ஓரங்க நாடக நூல்
* பாடசாலை நாடகம் - கட்டுரை
* கலையுலகில் கால் நூற்றாண்டு - சுயசரிதம்
* அரங்கு கண்ட துணைவேந்தர் - வரலாறு
* நிஜங்களின் தரிசனம் - வரலாறு
* தாளக்காவடி - கட்டுரை
* மயில் - நாடகம்
* அரங்கக் கலைஞர் ஐவர் - வரலாறு

கலைஞருடைய உணர்வுகள் ஆற்றல்மிக்கவை. தன்னைப் பாதித்த அனுபவங்களையே ஒரு கலைஞன் படைப்புப் பொருளாகக் கொண்டு வருகிறான். கலைப்பேரரசு அவர்களின் நாடகங்கள் அனைத்திலும் இத்தன்மையைச் சுட்டிப்பாகக் காணலாம்.

பரமேஸ்வராக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் பிரான்ஸ் நாட்டு மோலியரின் "லோபி" (1950) நாடகத்தில் லோபியாக நடித்த காலம் முதல் இன்றுவரை ஏ.ரி.பொ அவர்கள் நல்ல நடிகராகவும், நெறியாளராகவும், தயாரிப்பாளராகவும் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளார்.

"லோபி" நாடகத்தில், சானாவின் நெறியாள்கையில் சிறப்பாக நடித்தமைக்காக அதிபர் சிவபாதசுந்தரம் அவர்கள் இவரை மாணவர் தலைவர் ஆக்கினார். அதிபர் சிவபாதசுந்தரம் அவர்களுக்கும் "சானா" அவர்களுக்கும் ஏ.ரி.பொ என்றும் நன்றி உள்ளவராக இருக்கிறார்.

"நாடக நூல்களைப் படிப்பதில் அல்லது நடிப்பதில் உள்ள சுவையும் குதூகலமும் பூரிப்பும் வேறு எதிலும் எனக்குப் பிறப்பதில்லை" என்று ஒரு பேட்டியில் ஏ.ரி.பொ அவர்கள் கூறுவதில் இருந்து அந்தக் கலை மீது இவருக்குள்ள ஈடுபாட்டை அறியலாம்.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் ஸ்கொத்லாந்து நாட்டு நாடக மேதைகளுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார். ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களைப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பமும் அவருக்கு வாய்க்கப் பெற்றது. இவை இவரது ஆளுமையில் பெரு விருத்தியை ஏற்படுத்தின. இந்தியாவில் குவேனி, ராகி மைடியர் போன்ற நாடங்களைப் பல பாஷை பேசுவோர் முன் மேடையிட்டுப் புகழ்தேடிக் கொண்டார்.

"வருஷம் பிறந்து முன்னம் முன்னம்" என்ற வானொலி நாடகம் இவரது நாடக எழுத்து வன்மைக்கு ஒரு உதாரணம் என்று "சானா" சொல்கிறார். லோபி நாடகத்திற்குப் பிறகு ஒஸ்கார் வைல்ட்டின் பதியூர் ராணி என்ற நாடகத்தில் சானாவின் நெறியாள்கையில் நடித்தார் ஏ.ரி.பி (1960). அரங்கக் கலைஞர் ஜவர் என்ற நூலில் "சானா" பற்றி இவர் எழுதியுள்ள கட்டுரை சானாவுக்கும் இவருக்கும் இருந்த நெருக்கத்தைக் காட்டும்.

1955 இல் சன்மார்க்க நாடக மன்றத்தை ஆரம்பித்த ஏ.ரி.பி அங்கு இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதிய தாகம், மன்னிப்பு, ஒளி பிறந்தது ஆகிய நாடகங்களை மேடையிட்டார். ஏ.ரி.பி எழுதிய நாடகங்களிலே விதியின் சதி, ஆயிரத்தில் ஒருவன், பிற்பகலிலே, செங்கோல் சரிந்தது, நிறைகுடம் ஆகிய நாடகங்கள் சன்மார்க்க நாடக மன்றம் மூலம் மேடையிடப்பட்டன.

பண்பின் சிகரம், பாசக்குரல், பரதன் ஆகிய நாடகங்களை மாவை முத்தமிழ்க் கலை மன்றத்தின் சார்பில் தயாரித்து மேடையேற்றினார். அவற்றில் முக்கிய பாத்திரமேற்று நடித்தவரும் ஆனார். மாவை. து. சண்முகநாதக் குருக்களுடன் அன்று முதல் இன்றுவரை ஒரு இறுக்கமான தொடர்பைப் பேணிவருகிறார்.



இலங்கை வானொலிக் கலை விழாக்களில் அவ்வப்போது வருஷம் பிறந்து முன்னம் முன்னம், காதல் கைநட்டம், பஞ்ச பூதங்கள் ஆகிய நாடகங்களைத் தயாரித்தளித்துள்ளார்.

இவர் எழுதிய "நாடகம்" என்ற ஓரங்க நாடகம் இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு நடத்திய நாடக எழுத்துருப் போட்டியில் 1966 இல் இரண்டாம் பரிசு பெற்றது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களுடன் இவர் கொண்டிருந்த உறவு காரணமாக அரங்கு கண்ட துணைவேந்தர் என்ற நூல் எழுந்தது. (1984).

நாடக எழுத்தாளர், நெறியாளர் என்ற நிலைகளில் இவருக்குப் பெருமை சேர்த்த நாடகங்களில் நிறைகுடம், தாளக்காவடி, இறுதிப்பரிசு, மயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

நிறைகுடம் என்ற நாடகம் ஈழத்தின் பல பாகங்களிலும் இருபத்தைந்து தடவைக்கு மேல் மேடையிடப்பட்டுப் பெரும் புகழீட்டியது.

தாளக்காவடி 1972 இல் இலங்கை வானொலி நடத்திய நாடக எழுத்துருப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று 13.10.73, 27.10.73 ஆகிய தேதிகளில் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. பின்னர் மேடை நாடகமாக மாற்றியமைக்கப்பட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதியில் முதன் முதலில் அரங்கேறியது. தொடர்ந்து நடேஸ்வராக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை, இராமநாதன் கல்லூரி எனப் பல மேடைகளைக் கண்டது.

தாளக்காவடி நாடகத்தின் சில பகுதிகள் ஏ.ரி.பி தனி நடிப்பாகச் செய்யும் போது எத்தனை முறையும் பார்க்கலாம் போல இருக்கும். யூனியன் கல்லூரியில் நடைபெற்ற கலை இலக்கியக் கள நிகழ்விலும், முரசொலி குறுநாவல் போட்டிப்

பரிசளிப்பு விழாவிலும், சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலிலும், மனோஜனக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இலக்கிய ஒன்றுகூடல் ஒன்றிலும் அவரது தாளக்காவடி தனிநடிப்பைக் கண்டு இரசித்து மகிழ்ந்தவர் ஏராளம்.

தாளக்காவடி நாடகத்தின் கருப்பொருள் மிக உயர்வானது. தான் பாதிக்கப்பட்ட போதும் தன் கடமையைச் செய்ய மறக்காத உயர் பாத்திரமாக அண்ணாவியார் அமைகிறார். நாடகம் முழுவதும் விரவிக் கிடக்கும் ஆட்டங்களும் பாட்டுகளும் நாடகத்திற்கு வலிமை சேர்க்கும். இந்த நாடகத்தில் வரும் "உன் தணிசுக்குச் சப்போட் குடுக்க வேணும்" போன்ற வசனங்கள் ஏ.ரி.பி நேரே கதைப்பதைக் கேட்கும் உணர்வைத் தரும்.

நாடகம் முழுவதும் பரந்து கிடக்கும் மண்வாசனைச் சொற்கள் நாடகத்திற்கு மேலும் கனதி சேர்ப்பவை. எளிய வேலை, மறதிக்குணம், அல்லாட்டி, குறுக்காலை போவான், நடப்பு, ஞாயம் பிளக்கிறது, அட்டகாசம், எடுபிடியள், மல்லுக் கட்டிறது, பண்ணித்தானே பாத்தவை, திருகுதாளம், எழுந்த மானத்திலை, போக்கிரித்தனம், பிறத்தியார், வீடுவளிய, சிமாரெழுப்பி, தணிசு, பேய்த்தனம் என்று அச்சொற்களின் பட்டியல் நீளும்.

தாளக்காவடிப் பாடல்களைத் தெளிவான சத்தத்துடன் "அறுத்து உறுத்து" ஏ.ரி.பி பாடும் போது கேட்டால் அற்புதமாக இருக்கும்.

இறுதிப் பரிசு நாடகம் 1960 களில் தமிழ் நாடக உலகத்தை அரசோச்சிய மனோரதியப் பாணியில் எழுதப்பட்டது. கவிஞர் செ.கதிரேசர்பிள்ளையின் "பாரதம் தந்த பரிசு" நூலில் உள்ள நாடகங்களை ஒத்த ஒரு நாடகம். பாத்திரங்கள் - உயர் பாத்திரங்கள். வசனங்கள் செந்தமிழ் வசனங்கள். இறுதிப் பரிசு நாடகத்தில் இடையிடை வந்துவிட்ட பேச்சு வழக்குச் சொற்களைத் தவிர்த்திருக்கலாம். பதினொரு காட்சிகளைக் கொண்ட இந்



நாடகத்தில் இறுதி இரு காட்சிகளும் சிறப்பானவை. அடிப்படைக் கதைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் கற்பனைப் பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பு. இந்நாடகத்தின் உச்சக் கட்டம், ஒன்பதாவது காட்சியிலே சாத்தனார் - குமணர் சந்திப்பில் அழகுறப் புனையப்பட்டுள்ளது என்பது பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் கருத்து.

இலங்கைத் தமிழ் நாடகத்தின் வளர்ச்சிப் போக்குடன் தன்னை இணைத்து வளர்த்துக்கொண்ட ஏ.ரி.பி அவர்கள் பிற்பட்ட காலத்தில் எழுதித் தயாரித்த ஒரு நாடகம் மயில். மயில் நாடக எழுத்துரு நாடக உலகின் புதிய போக்குகளை அவர் உள்வாங்கிக் கொண்டதையும், புதிய அறிவைத் தேடிப் பெற்றுக்கொண்டதையும் காட்டும். கட்டுவன், வறுத்தலைவிளான், வீமன்காமம் பகுதிகளில் நிலவி வந்த வசந்தன் நாடக மெட்டுக்களையும், ஒயிலாட்ட நாடக இசையையும் கிராமிய நடனங்களின் நடைகளையும் உள்வாங்கித் தயாரிக்கப்பட்டது மயில். மயில் நாடகத்தை அவர் முதன் முதலில் தனது பழைய கல்லூரியான காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவருக்குப் பயிற்றினார். பின்னர் வேறு பல பாடசாலைகளிலும் இது மேடையேறியது. மயில் நாடகத்தில் வரும் பாடல்கள் சிலவற்றிலும் தாளக்காவடி ஜதி வரும்.

"நாடக நங்கை மேல் எனக்கொரு ஆறாக் காதல்" என்று அடிக்கடி கூறும் ஏ.ரி.பி ஆரம்ப காலம் முதல் நல்லதொரு நடிகராகவும் இருந்துள்ளார்.

இலங்கைக் கலைக்கழகப் பரிசுபெற்ற யாழ் மறுமலர்ச்சி மன்றத்தினரின் ஆராமுது ஆரடா என்ற நாடகத்திலும் கொழும்பில் பெரும் புகழீட்டிய சானாவின் பதியூர் ராணியிலும் இவரது நடிப்பு வியக்கத்தக்க வகையில் இருந்தது. மௌனகுருவின் "சங்காரம்" தாஸீஸியசின் "பொறுத்தது போதும்", மகாகவியின் "கோடை" ஆகிய நாடகங்களில் இவரது நடிப்பு நவீன நடிப்பு முறைகளை

உள்வாங்கி அமைந்தமை பாராட்டுதற்குரியது. "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற பாரதியின் பாடலுக்கு ஏற்ப இலங்கையின் பல நகரங்களிலும் தமிழ் முழங்கி நடித்து நிறைவு கண்டவர் இக் கலைஞர்.

யாழ் இலக்கிய வட்டத்தோடும் கலை இலக்கியக் களத்தோடும் நீண்டகாலத் தொடர்பைப் பேணிப் பல முக்கிய பொறுப்புக்களை வகித்து இலக்கியப் பணியும் குறைவின்றிப் புரிந்தவர்.

விழாக்களுக்கு அழைப்புக் கொடுத்தால் அந்த விழாவுக்கு தவறாமல் வருகிற, நேரத்துக்கு வந்து விழா முடியும் வரை இருக்கிற, ஒரு உன்னத நடத்தை இவரிடம் எப்போதும் உண்டு. அழைப்புக் கிடைத்தும் விழாவுக்கு வராதவர்களையும், பாதியில் எழுந்து போகிறவர்களையும், நேரம் தவறி வருபவர்களையும் இவருக்குப் பிடிக்காது. மேடையில் பேசும் போது நேர ஒழுங்கைக் கண்டிப்பாகப் பேணுவார்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்

என்ற குறளுக்கு ஏற்ப இவர் செய்த செயல்கள் என்றும் இவர் பெயரை இந்த மண்ணில் பெருமையுடன் நிலைநிறுத்தும்.

பவளவிழா அகவையில் இருக்கும் ஏ.ரி.பி சற்றுச் சுகயீனமாக இருக்கிறார். என்றாலும் வயதுகளில் ஓரமல்ல - வாழ்க்கையின் சாரமிது. ஆரோக்கியமான முதுமை பொழுதெல்லாம் பூச்சொரியும் வசந்தமாகிறது.

நிச்சயம் அவர் காலநதியின் அலைமீது உலாவுவார். தமிழ் நாடக உலகுக்கு அவர் செய்த பணி எக்காலமும் நிற்கும். அது பல சந்ததிகளில் பேசப்படும். இந்த மண்ணின் மைந்தனாய் விண்தொட நிமிர்ந்து குடும்பத்துடன் இன்னும் பல்லாண்டு வாழவேண்டும் அவர்.

# ஏ.ரி.பொ.

ஈழத்து நாடக
வளர்ச்சிக் களத்தில்
இடையீடின்றி
ஆடிய நாயகன்.

அரங்கக் கலையில்
ஐம்பது ஆண்டுகள்
அயராதுழைத்த
அருங்கலைக் காவலன்.

ஆட்டக் கூத்துக்
களத்தில் தொடங்கி
நவீன அரங்கில்
நவயுகம் படைத்தவர்.

கலையரசாலே
கலைப்பேரரசெனக்
கலைமுடி சூடிய
கவின்கலைச் செம்மல்.

பொன்விழாக் கண்டு
புகழ்மிகக் கொண்டவர்
பவளவிழா கண்டு
பல்லாண்டு வாழிய!

சைவப்புலவர் சு. செல்லத்துரை